**தேர்வுகள் மிக மிக அவசரம்**

**சென்னை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள், சென்னை-08**

**ந.க.எண். 2123/அ5/2023 நாள். 10 .03.2023**

**பொருள்** பொதுத்தேர்வுகள் – தேர்வு மையங்கள் – ஆசிரியர்கள் நியமனம் – நியமன ஆணை பெறாத ஆசிரியர்கள் முதன்மைக் கல்வி அலுவலகத்திற்கு நேரில் வர (11.03.2023 காலை 9.30 மணி) – கோருதல் சார்பு.

………………"

மேற்காண் பொருள் குறித்து, தங்களின் கனிவான கவனத்தை ஈர்க்க விளைகிறேன்.

மார்ச்/ஏப்ரல் 2023- பொதுத் தேர்வுகள் சென்னை மாவட்டத்தை பொறுத்தவரை 187 தேர்வு மையங்கள் செயல்படுகின்றன. பொதுத் தேர்வுகள் சார்பாக தொடர்பு அலுவலர்கள் வினாத்தாள் கட்டுக் காப்பாளர்கள், முதன்மைக் கண்காணிப்பாளர்கள், துறை அலுவலர்கள். வழித்தட அலுவலர்கள், பறக்கும்படை உறுப்பினர்கள் . அறைக் கண்காணிப்பாளர்கள் சொல்வதை எழுதுபவர் (Scribe) மற்றும் அலுவலகப் பணியாளர்களுக்கு தேர்வு பணிகள் மேற்கொள்ள சார்ந்த தேர்வு மையங்களுக்கு நியமன ஆணை வழங்கப்பட்டுள்ளது, சென்னை மாவட்டத்திலுள்ள அனைத்து அரசு / அரசு உதவிபெறும்/ சென்னை/ ஆதிதிராவிட நல பள்ளிகள் , மெட்ரிக் மற்றும் ஆங்கிலோ இந்தியன் பள்ளிகளின் ஆசிரியர்களை மேற்காண் பணிகளை மேற்கொள்ள இவ்வலுவலகத்தால் நியமனம் செய்யப்பட்டு ஆணை வழங்கப்பட்டுள்ள அனைத்து ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியல்லாத பணியாளர்களை உடன் விடுவிக்கப்பட வேண்டும்.

சில பள்ளிகளில் ஆசிரியர்கள் ( பட்டதாரி ஆசிரியர், உடற்கல்வி ஆசிரியர் தவிர) அனைவருக்கும் ஆணை வழங்கப்பட்டுள்ளது. ஆணைகள் பெறப்படாத ஆசிரியர்கள் 11.03.2023 **(சனிக்கிழமை) அன்று காலை 9.30 மணி அளவில்** சம்மந்தப்பட்ட ஆசிரியர்களுக்கு தேர்வு பணி

Scanned with OKEN Scanner

ஆணையும், தேர்வு சார்பாக அறிவுரையும் வழங்க உள்ளதால் முதன்மைக் கல்வி அலுவலகத்திற்கு நேரில் வருமாறு இதன் மூலம் தெரிவிக்கலாகிறது. ஆகவே அனைத்து அரசு / அரசு உதவிபெறும்/ சென்னை/ ஆதிதிராவிட நல/ ஆங்கிலோ இந்தியன் பள்ளி தலைமையாசிரியர்கள் சம்பந்தப்பட்ட ஆசிரியர்களுக்கு உரிய அறிவுரைகளை வழங்கி எவ்வாசிரியர்களும் விடுபடாமல் இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு இதன் மூலம் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும் தேர்வு பணிகள் அதிமுக்கியத்துவம் வாய்ந்தவை என்பதால் எவ்வித சுணக்கமின்றி செயல்படுமாறு அனைத்து தலைமையாசிரியர்கள்/முதல்வர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

10.3.23

முதன்மைக்கல்வி அலுவலர்

10/3/23

பெறுநர்

1. அனைத்து அரசு / அரசு உதவிபெறும்/ சென்னை/ ஆதிதிராவிட நல உயர்/ மேல்நிலைப் பள்ளி (தலைமையாசிரியர்கள்) சென்னை மாவட்டம்
2. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள், சென்னை மாவட்டம் தகவலுக்காக

Scanned with OKEN Scanner